TNVR090001342022

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
முன்னிலை ... திரு. R.V. ராஜகுமார், B.L.,
சார்பு நீதிபதி, விருதுநகர்.

2023 ம் ஆண்டு ஜூலை திங்கள் 13 ம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண். 1/2022
இன்
இந்து திருமண முதலேற்பு மனு எண்.26/2022

XXXXX ... மனுதாரர்/எதிர்மனுதாரர்

/எதிர்/

XXXXXXXXXXXX ... எதிர்மனுதாரர்/மனுதாரர்

இந்த மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்பு 13.07.2023 அன்று இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. G. அரங்கநாதன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு. J. மகேஷ்குமார் அவர்களும் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலைனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து அளிக்கும்

**உத்தரவு**

மனுதாரருக்கு இடைக்கால ஜீவனாம்சமாக மாதந்தோறும் ரூ.20,000/–மும், அவரது இரு பிள்ளைகளுக்கும் இடைக்கால ஜீவனாம்சமாக மாதந்தோறும் தலா ரூ.10,000/–மும், வழங்க உத்தரவிடக் கோரி இந்து திருமணச் சட்டம் பிரிவு 24 ன் கீழ் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. <u>மனுவின் சுருக்கம் :-</u>

இந்த மனுவின் மனுதாரர் அசல் மனுவின் எதிர்மனுதாரர். அசல் மனுவானது விவாகரத்து கோரி இந்த மனுவின் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 18.10.2000 ம் தேதியன்று திருமணம் நடைபெற்றது. மேற்படி திருமண வாழ்க்கையின் பயனாக 03.09.2001 ம் தேதியன்று விஜய் என்ற ஆண் குழந்தையும், 11.01.2004 ம் தேதியன்று ரவீணா என்ற பெண் குழந்தையும் பிறந்துள்ளனர். எதிர்மனுதாரர் இந்திய ராணுவத்தில் பணிபுரிந்து மாதம் ரூ.80,000/- வரை சம்பாதித்து வருகிறார். எதிர்மனுதாரர் சொந்த வீட்டில் வசித்தும், வாழ்ந்தும் வருகிறார். எதிர்மனுதாரரின் பராமரிப்பில் யாரும் இல்லை. எதிர்மனுதாரர் பெறும் வருமானங்கள் அனைத்தையும் அவரே தான் தோன்றித்தனமாக செலவு செய்து வருகின்றார். எதிர்மனுதாரரின் பராமரிப்பு இல்லாததாலும், ஆண் மற்றும் பெண் பிள்ளைகளோடு எவ்வித தனிப்பட்ட வருமானம் இல்லாமலும் மனுதாரர் அவரது தாய், தகப்பனாரை நம்பி வாழ்ந்து வருகிறார்.

மனுதாரர் எவ்வித வருமானமும் இன்றி பிள்ளைகளின் அன்றாட தேவைகளான உணவு, உடை, இருப்பிடம், மருத்துவம் ஆகியவற்றிற்கு அவருடைய வயதான பெற்றோர்களை நம்பி வாழ்ந்து வந்தும், ரேஷன் கடையில் அரிசி வாங்கி ஒரு வேளை உணவு உண்டும், ஒரு வேளை உணவு உண்ணாமலும் கஷ்ட ஜீவனம் செய்து வருவதாகவும், எதிர்மனுதாரருக்கு போதிய வசதி வாய்ப்புகள் இருந்தும் வேண்டுமென்றே மனுதாரரையும், அவரது குழந்தைகளையும் புறக்கணிப்பு செய்து வருகின்றார். மனுதாரர் மற்றும் அவரது குழந்தைகளை பராமரிப்பதற்கும், இரு குழந்தைகள் படிப்பதற்கும், உணவு, உடை, இருப்பிடம், மருத்துவச்செலவு மற்றும் இன்னபிற அத்தியாவசிய தேவைகளுக்கும் மனுதாரருக்கு ரூ.20,000/-மும், மகனுக்கு ரூ.10,000/-மும், மகளுக்கு ரூ.10,000/-மும் மாதம்தோறும் இடைக்கால ஜீவனாம்சமாக

தேவைப்படுகிறது. எனவே, இந்த தொகைகளை எதிர்மனுதாரர் கொடுக்க உத்தரவிட வேண்டி மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிருரையின் சுருக்கம் :–</u>

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவானது எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். மனுதாரரின் மனுவானது சட்டப்படியும், சங்கதிப்படியும் செல்லத்தக்கதல்ல. மேற்படி மனு பாரா 3 முதல் 5ல் சொல்லியுள்ள விவரங்கள் பொய்யானவை. மேற்படி எதிர்மனுதாரர் கடமையுள்ள கணவனாக அவரது மனைவியையும், குழந்தைகளையும் தற்போது வரை பராமரித்து வருவதாகவும், மனுதாரருக்கு அவர் வங்கி கணக்கு மூலம் பணம் அனுப்பி வருவதாகவும், மேற்படி மனுதாரர் அவரது பெற்றோர், சகோதரர், குழந்தைகள் குடும்பத்தினரோடு எதிர்மனுதாரர் வீட்டில் தற்போது வரை குடியிருந்து வருவதாகவும், மேற்படி எதிர்மனுதாரரிடம் அதிகமான பணத்தை கரக்கும் எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி எதிர்மனுதாரர், மனுதாரருக்கு 2005ம் ஆண்டு முதல் ரூ.18,61,464/– செலவழித்துள்ளதாகவும், அவரது வங்கி கணக்கு மூலம் மனுதாரருக்கு செலவழித்துள்ளதாகவும், அதற்கும் அப்பால் மேற்படி மனுதாரர் 2011 முதல் 2020 வரை மொத்தம் ரூ.29,82,171/–யை மேற்படி எதிர்மனுதாரருக்குரிய வங்கி கணக்கிலிருந்து மனுதாரருக்கு கொடுத்துள்ளதாகவும், மனுதாரரின் மகனின் கல்விக்காக ரூ.72,000/– வரை செவவழித்துள்ளதாகவும், எதிர்மனுதாரர் மகனுக்காக ரூ.1,20,000/–த்திற்கு பஜாஜ் பல்சர் என்ற இரு சக்கர மோட்டார் சைக்கிள் வாகனமும், மனுதாரருக்கு ரூ.98,000/–த்திற்கு மற்றொரு இரு சக்கர வாகனமும் வாங்கியுள்ளதாகவும், மேற்படி எதிர்மனுதாரர் அவரது மனைவி மற்றும் மகளுக்காக 30 பவுன் தங்க ஆபரணங்களை வாங்கி கொடுத்துள்ளதாகவும், மேற்படி எதிர்மனுதாரர் ஒவ்வொரு வருடமும் குடும்ப சுற்றுலா செல்வது வழக்கம் என்றும், அதற்கு ரூ.4,00,000/– வரை செலவு

செய்துள்ளதாகவும், எதிர்மனுதாரர் அவரது குழந்தைகளின் மருத்துவ செலவை தற்பொழுது வரை கவனித்து வருவதாகவும், அவரது வீட்டின் தளவாடச் சாமான்கள் வாங்க ரூ.2,10,000/– செலவழித்துள்ளதாகவும், எனவே, மேற்படி எதிர்மனுதாரர் அவரது குடும்பத்தை தற்போது வரை பராமரித்து வருவதாகவும், மேலும், எதிர்மனுதாரரிடமிருந்து அதிக பணத்தை கரக்கும் வகையில் மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் சொல்லியுள்ளார். எனவே, மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4.** இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.11 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5.** இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

**6.** தற்போது மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரமானது மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதா என்பதே இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை.

**7.** அசல் மனுவானது விவாகரத்து கோரி இந்த மனுவின் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 18.10.2000 ம் தேதியன்று திருமணம் நடைபெற்றதாகவும், மேற்படி திருமண வாழ்க்கையின் பயனாக 03.09.2001 ம் தேதியன்று விஜய் என்ற ஆண் குழந்தையும், 11.01.2004 ம் தேதியன்று ரவீணா என்ற பெண் குழந்தையும் பிறந்துள்ளதாகவும், எதிர்மனுதாரர் இந்திய ராணுவத்தில் பணிபுரிந்து மாதம் ரூ.80,000/– வரை சம்பாதித்து வருவதாகவும், எதிர்மனுதாரர் சொந்த வீட்டில் வசித்தும், வாழ்ந்தும் வருவதாகவும், எதிர்மனுதாரரின் பராமரிப்பில் யாரும் இல்லை என்றும், எதிர்மனுதாரர் பெறும் வருமானங்கள் அனைத்தையும் அவரே தான் தோன்றித்தனமாக செலவு செய்து வருவதாகவும்,

எதிர்மனுதாரரின் பராமரிப்பு இல்லாததால் ஆண் மற்றும் பெண் பிள்ளைகளோடு எவ்வித தனிப்பட்ட வருமானம் இல்லாமல் மனுதாரர் அவரது தாய், தகப்பனாரை நம்பி வாழ்ந்து வருவதாகவும், பிள்ளைகளின் அன்றாட தேவைகளான உணவு, உடை, இருப்பிடம், மருத்துவம் ஆகியவற்றிற்கு அவருடைய வயதான பெற்றோர்களை நம்பி வாழ்ந்து வந்தும், ரேஷன் கடையில் அரிசி வாங்கி ஒரு வேளை உணவு உண்டும், ஒரு வேளை உணவு உண்ணாமலும் கஷ்ட ஜீவனம் செய்து வருவதாகவும், எதிர்மனுதாரருக்கு போதிய வசதி வாய்ப்புகள் இருந்தும் வேண்டுமென்றே மனுதாரரையும், அவரது குழந்தைகளையும் புறக்கணிப்பு செய்து வருவதாகவும், மனுதாரருக்கும், அவரது பிள்ளைகளை பராமரிப்பதற்கும், படிப்பதற்கும், உணவு, உடை, இருப்பிடம், மருத்துவச்செலவு மற்றும் இன்னபிற அத்தியாவசிய தேவைகளுக்கும் மனுதாரருக்கு ரூ.20,000/-மும், பிள்ளைகளுக்கு தலா ரூ.10,000/- வரை தேவைப்படுவதாகவும் கூறியுள்ளார்.

8. மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில் திருமணம் நடந்ததையோ, குழந்தைகள் உள்ளதையோ மறுக்கவில்லை. எனவே, மனுதாரரும், எதிர்மனுதாரரும் கணவன், மனைவி என்பதும், அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் படித்து கொண்டிருக்கிறார்கள் என்பதும் தெரிய வருகிறது. மேலும், மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி மனுதாரரையும், அவரது குழந்தைகளையும் முறையாக பராமரித்து வருவதாகவும், வழக்கமாக மனுதாரருக்கு அவரது வங்கி கணக்கின் மூலம் பணம் கொடுத்து வருவதாகவும் சொல்லியுள்ளார். மேற்படி மனுதாரரும், அவரது பெற்றோர்களும், சகோதரரும், குடும்பத்தினரும் மேற்படி எதிர்மனுதாரரின் வீட்டில் தற்போது வரை வசித்து வருவதாகவும், அதிக தொகையை பெறுவதற்காக மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் வாதிடப்பட்டது.

9. மேலும், அதை நிரூபிக்கும் வகையில் மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில்

எதிர்மனுதாரரின் வங்கி கணக்கு நகல் எ.ம.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை பார்க்கும்பொழுது பல்வேறு தொகைகளை பல்வேறு தேதிகளில் கடந்த 2005 முதல் மேற்படி எதிர்மனுதாரர், மனுதாரரின் வங்கி கணக்கிற்கு செலுத்தி வந்துள்ளார் என்பது தெரிய வருகிறது. அதேபோல் மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எ.ம.சா.ஆ.4 ஆன வங்கி சலானை பார்க்கும்பொழுது மேற்படி எதிர்மனுதாரர் மேற்படி மனுதாரருக்கு ஒவ்வொரு மாதமும் பல்வேறு தேதிகளில் ரூ.20,000/– அனுப்பி வந்துள்ளார் என்பது தெரிய வருகிறது. மேலும், மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி எதிர்மனுதாரர் தனது மகன் விஜயின் கல்வி செலவிற்காக பல்வேறு தேதிகளில் பணம் அனுப்பியுள்ளதாக சொல்லியுள்ளார். மேலும், தனது மகனுக்கு ரூ.1,20,000/– பஜாஜ் மோட்டார் சைக்கிளும், மனுதாரருக்கு ரூ.98,000/–ற்கு மற்றொரு இரு சக்கர வாகனமும் வாங்கியதாக சொல்லியுள்ளார். அதேபோல் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எ.ம.சா.ஆ.5 யை பார்க்கும்பொழுது எதிர்மனுதாரரின் மகனான விஜய் என்பவர் பெயரில் பஜாஜ் பல்சர் 150dts என்ற பெட்ரோல் வாகனம் வாங்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. மேலும், மேற்படி எ.ம.சா.ஆ.6 யை பார்க்கும்பொழுது தனது மகனின் கல்விக்காக ரூ.13,000/–த்தை 20.10.2021ம் தேதியன்று செலுத்தியுள்ளார் என்பதும், மேலும், எ.ம.சா.ஆ.7 ஆவணத்தை பார்க்கும்பொழுது எதிர்மனுதாரர் தனது மகனுக்கு பல்வேறு தேதிகளில் பல்வேறு தொகைகளை selfcash மூலமாக அனுப்பியுள்ளார் என்பது தெரிய வருகிறது. ஆனால், மேற்படி விவரங்கள் மேற்படி மனுதாரரால் மறுக்கப்படவில்லை.

**10.** மேலும், மேற்படி மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கடன் மற்றும் பொறுப்பு பற்றிய அபிடவிட்டில் எதிர்மனுதாரர் இந்திய இராணுவத்தில் JCO ஆக பணியாற்றுவதாகவும், மாதம் ரூ.80,000/– வருமானம் பெறுவதாகவும்,

மனுதாரருக்கும் அவரது குழந்தைகளுக்கும் மாதம் ரூ.40,000/- பராமரிப்பு தொகையாக தேவைப்படுவதாகவும் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கடன் மற்றும் பொறுப்பு பற்றிய அபிடவிட்டில் எதிர்மனுதாரர் செக்சன் கமாண்டராக பணி புரிந்து வருவதாகவும், மாதாந்திர வருமானம் ரூ.45,000/- என்றும், தனது சொந்த செலவுகளுக்காக மாதம் ரூ.30,000/- தேவைப்படுவதாகவும் சொல்லியுள்ளார். எனவே, மேற்படி எதிர்மனுதாரர் மாதாந்திர செலவு தொகை தருகின்ற நிலையிலும், மேற்படி மனுதாரர் அதை மறைத்து மேற்படி எதிர்மனுதாரர் தன்னை பராமரிக்கவில்லை என்று கூறி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மேலும், மேற்படி மனுதாரரின் குழந்தைகள் விஜய், ரவீணா என்பவர்களில் விஜய் என்பவர் முதுகலையும், ரவீணா என்பவர் இளங்கலையும் படித்து வருவதாக மனுதாரர் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்ட சூழ்நிலையில் அவர்கள் உரிமை வயதை அடைந்துள்ளார்கள் என்பது தெரிய வருகிறது. எனவே, மேற்படி மனுதாரரின் மகனுக்கும், மகளுக்கும் பராமரிப்பு தேவைப்படுகிறது என்றால் அவர்கள் தனியாகவே மனு தாக்கல் செய்ய வேண்டும். அவர்களுக்காக மனுதாரர் பராமரிப்பு தொகை கேட்க இயலாது. மேலும், மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில் பராமரிப்பு தொகை ஏற்கனவே செலுத்தி வருகிறார் என கூறியுள்ள நிலையில் மேற்படி எதிர்மனுதாரர், மனுதாரருக்கு மாதம் ரூ.20,000/- அனுப்பி வருவதாக எ.ம.சா.ஆ.4 ஆவணத்தின் மூலம் தெரிய வருவதால் அதையே மேற்படி மனுதாரருக்கான பராமரிப்பு தொகையாக வழங்க உத்தரவிடலாம் என கருதி மேற்படி எதிர்மனுதாரர், மனுதாரருக்கு மாதம் ரூ.20,000/-த்தை ஒவ்வொரு ஆங்கில மாதமும் 10ம் தேதிக்குள் இந்த எதிர்மனுதாரர், மனுதாரருக்கு வழங்க வேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, இந்த மனுவை பகுதியாக அனுமதித்து மனுதாரருக்கு

ரூ.20,000/–த்தை இடைக்கால ஜீவனாம்சமாக இந்த எதிர்மனுதாரர், மனுதாரருக்கு கொடுக்க வேண்டும் என்றும், இடைக்கால ஜீவனாம்சத் தொகையை ஒவ்வொரு ஆங்கில மாதமும் 10ம் தேதிக்குள் இந்த எதிர்மனுதாரர், மனுதாரருக்கு கொடுக்க வேண்டும் என்றும், இடைக்கால ஜீவனாம்சத் தொகையை இம்மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து அசல் மனு முடியும் வரை செலுத்த வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2023ம் ஆண்டு ஜூலை திங்கள் 13ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

சார்பு நீதிபதி,
விருதுநகர்.

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** – இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி** – இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | -- | குழந்தை ரவீணாவின் பிறப்புச் சான்றிதழ் – நகல் |
| எ.ம.சா.ஆ.2 | -- | எதிர்மனுதாரரின் வங்கி கணக்கு – நகல் |
| எ.ம.சா.ஆ.3 | -- | எதிர்மனுதாரர் அவரது மனைவிக்கு பல்வேறு தேதிகளில் பணம் அனுப்பியதற்கான வங்கி கணக்கு (எண்ணம் 44) – நகல் |
| எ.ம.சா.ஆ.4 | -- | வங்கி சலான் (எண்ணம் 9) – அசல் |
| எ.ம.சா.ஆ.5 | -- | எதிர்மனுதாரரின் மகன் விஜய் பெயரில் உள்ள பஜாஜ் பல்சர் 150dts என்ற பெட்ரோல் வாகனத்தின் R.C புத்தகம் |
| எ.ம.சா.ஆ.6 | -- | எதிர்மனுதாரர் அவரது மகன் விஜய்க்கு செலுத்திய கல்லூரி கட்டண ரசீது – நகல் |

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.7 | -- | எதிர்மனுதாரர் அவரது மகன் விஜய்க்கு பணம் அனுப்பிய selfcash – நகல் |
| எ.ம.சா.ஆ.8 | -- | எதிர்மனுதாரர் பெயரில் உள்ள ஆயுள் காப்பீடு – நகல் |
| எ.ம.சா.ஆ.9 | -- | எதிர்மனுதாரர் பெயரில் உள்ள மருத்துவ பில்கள் – நகல் |
| எ.ம.சா.ஆ.10 | -- | எதிர்மனுதாரரின் டிராவல் ஆவணம் – நகல் |
| எ.ம.சா.ஆ.11 | -- | எதிர்மனுதாரரின் கணக்கு அறிக்கை – நகல் |

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

சார்பு நீதிபதி,
விருதுநகர்.

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
இ.ம.எண்.1/2022 இன்
இ.தி.மு.ம.எண்.26/2022
உத்தரவு
நாள். 13.07.2023